என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஒரு ஐந்து நிமிடம் பொறுத்துக் கொள்ளுங்கள், தங்கள் கருத்துக்களைக் குறிப்பிட உடனடியாக வாய்ப்புக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.

4. அறிவிப்பு.

அவை அலுவல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு அறிவிப்பு. இந்தக் கூட்டத் தொடரில் நடக்கவிருக்கும் அலுவல்கள் பற்றி, அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவுகள் நிகழ்ச்சிநிரலாக அச்சிட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதிலே கண்டபடி, இப்பேரவையின் கூட்டம் இம் மாதம் 20-ம் நாள் வரையில் நடைபெறும். அவ்வாறு நடைபெறுவதற்கு வாய்ப்பு அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இன்று ஒவ்வொருவருக்கும் பனிரெண்டு நிமிடம் என்கிற காலவரைக்குள் தங்கள் தங்கள் உரைகளை ஆற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

5. ஆளுநரின் பேருரைமீது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது ஆளுநர் உரைக்கு நன்றிதெரிவிக்கும் தீர்மானத்தின்மீது தொடர்ந்து விவாதம் நடைபெறும். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் இப்பொழுது உரையாற்றுவார்கள். தாங்கள் பேச வேண்டியவற்றை பேசுங்கள். இதுதான் சமயம்.

திரு. க. ர. நல்லசிவன் : பெருமதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மனப்பூர்வமான நன்றியைத் தங்களுக்குத் தெரிவித்து, என்னுடைய வார்த்தைகளை ஆரம்பிக்க விரும்புகிறேன்.

நீர்பாசன விவகாரத்திலே, இந்த அரசாங்கமானது இன்னும் சற்று கவனமாக நடந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த ராச்சியத்தைப் பொருத்தவரையில், பெரிய நீர்பாசன வசதியை அபிவிருத்தி செய்ய எதுவும் கிடையாது. பெரிய அளவில் செய்ய எதுவும் இல்லை என்பது எல்லோரும் அறிந்தது. ஆனல் நம்முடைய பக்கத்திலே இருக்கக்கூடிய, கேரளா, ஆந்திரா, மைசூர் போன்ற அண்டை மாநிலங்களோடு பேசுவதுதான் இனிமேல் நாம் செய்யக்கூடிய திட்டங்களுக்கு பயன் அளிக்கக் கூடியதாக இருக்கும். அல்லது இந்திய சர்க்காரோடு பேசி, வடக்கே இருக்கும் தண்ணீரை இங்கே கொண்டுவர ஏதாவது செய்ய முடியுமா என்பதையும் பார்க்க வேண்டும். அப்படி ஏதாவது செய்தால்தான் நம்முடைய நீர்பாசனப் பசியை தீர்க்க முடியும். இல்லை என்றால் இந்தப் பசியை நாம் தீர்க்கவே முடியாது. ஆகவே, நாங்கள் சொல்லும் வழி இப்பொழுது இருக்கக்கூடிய கீழ் பவானி பாசனத்தில் செய்யக்கூடிய திருத்தங்கள். ஏதோ நான் இருக்கக் கூடிய பகுதி என்பதற்காக அதில்